செ.வெ.எண்:15/2019 நாள்:07.08.2019

# பத்திரிக்கைச் செய்தி

சிவகங்கை மாவட்டம், சிவகங்கையில் உள்ள அரசு ஐ.டி.ஐ-யில் அம்மா இருசக்கர வாகன பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு பிரிவில் மாலை நேர குறுகிய கால இலவச தொழிற் பயிற்சி துவங்கவுள்ளது. அதில் சேர சிவகங்கை ஒன்றியத்தை சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. பகுதி நேர பயிற்சியாக தினமும் மாலை 4 மணி முதல் 7 மணி வரையிலும், வார இறுதி நாட்களில் காலை 9 மணிமுதல் மாலை 4 மணி வரையிலும் பயிற்சி நடைபெறும். பயிற்சி மொத்தம் 300 மணி நேரம் நடைபெறும் பயிற்சியாளர்களுக்கு பயிற்சிக்கு வந்து செல்ல தினமும் ரூ.100 போக்குவரத்து செலவுக்காக வழங்கப்படும். பயிற்சியை நிறைவு செய்வோருக்கு சான்றிதழ் வழங்கி வேலைவாய்ப்பு ஏற்படுத்தி தரப்படும்.

பயிற்சியில் சேர குறைந்த பட்சம் 8-ஆம் வகுப்பு அல்லது பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். பொது தனியார் நிறுவனங்களில் பணி புரிவோர் மாலை நேர குறுகிய கால பயிற்சியில் சேரலாம். வயது 18 முதல் 45-க்குள் இருக்க வேண்டும். பயிற்சியில் சேர விருப்பம் உள்ளவர்கள் தங்களது கல்வி சான்று, சாதிச்சான்று, ஆதார்கார்டு, இருப்பிட சான்றாக குடும்ப அடையாள அட்டை ஆகியவற்றின் 2 நகல்களுடன் அன்மையில் எடுக்கப்பட்ட 3 புகைப்படங்களுடன் நேரில் வர வேண்டும். அரசு ஐ.டி.ஐ அலுவலக நாட்களில் காலை 10 மணி முதல் மாலை 5.30 மணி வரை விண்ணப்பத்தைப் பெற்று பூர்த்தி செய்து விண்ணப்பிக்கலாம்.

இது தொடர்பான மேலும் விவரங்களுக்கு முதல்வர், அரசினர் தொழிற் பயிற்சி நிலையம், சிவகங்கை அவர்களை அணுகுமாறு அரசினர் தொழிற் பயிற்சி நிலைய முதல்வர் திரு.கே.மோகனசுந்தரம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

போன் :**91506 11756.**

::வெளியீடு::

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**சிவகங்கை.**